## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.69/2023</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பெஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **06.03.2026** |
| **பெயர்** | **கௌசல்யா @ கௌசல்யா தேவி** |
| **க/பெ** | **முருகப்பிரபு** |
| **சாட்சி** | **PW1** |
| **வயது** | **31** |
| **ஊர்** | **பொன்னேரி** |
| **தொழில்** | **இல்லத்தரசி** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.25.a.m**

**<u>முதல் விசாரணை–</u>**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணப் பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இவ்வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 23.11.2004 தேதியிட்ட ஏழுமலை S/o கோவிந்த ரெட்டியார் பெயரில் உள்ள பட்டா, பட்டா எண் 27 அசல் **வா.சா.ஆ 1** எனவும்.

(2). 27.07.2009 தேதியிட்ட ஏழுமலை ரெட்டியின் வாரிசுகள் பெயரில் உள்ள பட்டா, பட்டா எண் 436 அசல் **வா.சா.ஆ 2** எனவும்.

(3). ஏழுமலை ரெட்டி மற்றும் அவரின் வாரிசுதார்கள் பொன்னேரி கூட்டுறவு நில மேம்பாட்டு வங்கியில் ஏற்படுத்திய அடமானம் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 3** எனவும்.

(4). ஏழுமலை ரெட்டியின் பெயரில் உள்ள ரசீது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 4** எனவும்.

(5). சுந்தரேசன் பெயருக்கு வசந்தா மற்றும் இரு மகள்கள் எழுதி கொடுத்த அக்கு விடுதலை பத்திரம் **வா.சா.ஆ 5** எனவும்.

(6). சுந்தரேசன் S/o ஏழுமலை பெயரில் உள்ள பட்டா, பட்டா எண் 941 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 6** எனவும்.

(7). சுந்தரேசன் முருக பிரபுவை பொது அதிகார முகவராக நியமித்த பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 7** எனவும்.

(8). வாதிக்கு சுந்தரேசன் அவரின் பொது அதிகார முகவர் முருக பிரபு அவர்கள் எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 8** எனவும்.

(9). வாதி பெயரில் உள்ள பட்டா, பட்டா எண் 1043 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 9** எனவும் குறியீடு செய்யப்படுகிறது.

**விசாரணை முடியும் நேரம். 12.34. பி.எம்.**